காஞ்சிபுரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
முன்னிலை— திரு.ப.அ.ஆறுமுகம், எம்.எஸ்ஸி., எம்.எட்., எம்.ஃபில்.,
ப.மு.எண்.153/அ1/2021 நாள்.௦02.2021.

| | |
|---|---|
| பொருள் | தமிழ்நாடு அமைச்சுப் பணி – மதுராந்தகம் கல்வி மாவட்டம் – திருமதி.ந.வாணிவிக்னேஸ்வரி , இளநிலை உதவியாளர், அரசு மேல்நிலைப் பள்ளி, பொலம்பாக்கம் – இளநிலை உதவியாளர் பதவியில் திருத்திய பணிவரன்முறை செய்து ஆணை வழங்கக் கோருதல் – சார்ந்து |
| பார்வை | 1. அரசாணை (நிலை) எண்.101 பள்ளிக் கல்வி (வரவு செலவு) நாள்.18.05.2018.<br>2. சென்னை 6 பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.63975/அ4/இ1/2017 நாள். .10.2017.<br>3. செங்கல்பட்டு மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.2859/அ1/2017 நாள். .11.2017.<br>4. காஞ்சிபுரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ப.மு.எண்.8273/அ1/2019 நாள்.10.01.2020.<br>5. மதுராந்தகம் மாவட்டக் கல்வி அலுவலரின் கடித ந.க.எண்.3316/அ1/2019 நாள்.08.01.2021 |

காஞ்சிபுரம் மாவட்டம் பொலம்பாக்கம், அரசு மேல்நிலைப் பள்ளி (தற்போது செங்கல்பட்டு மாவட்டம்) இளநிலை உதவியாளர் திருமதி.ந.வாணிவிக்னேஸ்வரி என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பார்வை 4ல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின்படி பணிவரன்முறை செய்து வழங்கப்பட்ட ஆணை இரத்து செய்யப்பட்டு பின்வரும் திருத்திய ஆணை வழங்கப்படுகிறது.

சார்ந்த பணியாளரின் கல்விச் சான்றுகளின் உண்மைத் தன்மை அறியப்பட்டுள்ளதாலும், மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டிற்குள் தகுதிகாண் பருவத்தை முடிக்க வேண்டும் எனத் தெரிவித்தும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 31 (4)ல் தெரிவித்துள்ளவாறு ஐந்தாண்டுகளுக்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலும் இளநிலை உதவியாளர் பதவியில் கீழ்காணும் அவரது பெயருக்கு எதிரே கலம் (5)ல் உள்ளவாறு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கலாகிறது.

| வ. எண் | தேர்வாணை பட்டியல் வரிசை எண். | பெயர் / பதவி / பணிபுரியும் பள்ளி | இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | 157 | திருமதி.ந. வாணிவிக்னேஸ்வரி, இளநிலை உதவியாளர், அரசு மேல்நிலைப்பள்ளி, பொலம்பாக்கம். | 14.11.2017 முற்பகல் | 14.11.2017 முற்பகல் |

மேற்காண் பணியாளருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்து மேற்காண் பணியாளரின் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்தனுப்படுகிறது.

இணைப்பு – பணிப்பதிவேடு (தொகுதி–1)

முதன்மைக்கல்வி அலுவலர்,
காஞ்சிபுரம்

பெறுநர்
சம்பந்தப்பட்ட பணியாளர் (சார்ந்த தலைமையாசிரியர் வழியாக)
நகல்
1.தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, பொலம்பாக்கம் – 603 309.
2.மாவட்டக் கல்வி அலுவலர், மதுராந்தகம்.